# வேலையில் ஒரு காயம் அல்லது சுகவீனம் ஏற்பட்டால் என்ன செய்வது?

1

2

3

4

## வேலையில் நீங்கள் காயமடைந்தால் அல்லது சுகவீனமடைந்தால்

உங்கள் காயம் அல்லது நோயை WSIB-க்கு தெரிவிப்பதன் மூலம் நன்மைகளைப் பெற, காயம் ஏற்பட்ட திகதி அல்லது நோயறிதல் திகதியிலிருந்து உங்களுக்கு ஆறு மாதங்கள் உள்ளன.

பின்வரும் சந்தர்ப்பங்களிலும் கூட, உங்கள் பணியிடக் காயம் அல்லது நோயை அறிவிக்க வேண்டும்:

- உங்களது மேற்பார்வையாளர் அல்லது மேலாளர் புகாரளிக்க வேண்டாமென்று, அல்லது அறிவித்தால் வேலையை இழக்க நேரிடுமென்று கூறுகிறார்
- உங்கள் காயம் அல்லது சுகவீனம் WSIB ஆல் காப்பீடு செய்யப்படவில்லை என்று உங்கள் வேலைவழங்குநர் உங்களுக்குக் கூறுகிறார்
- பணியிடக் காயம் அல்லது சுகவீனத்தைப் புகாரளிப்பதை விட, அதிலிருந்து மீள்வதற்கு நோய்வாய்ப்பட்ட நாட்களைப் (sick days) பயன்படுத்துமாறு உங்கள் வேலைவழங்குநர் உங்களிடம் கூறுகிறார்

## வணிகங்கள்

பணியிடக் காயம் அல்லது சுகவீனம் குறித்து அறிந்த மூன்று வணிக நாட்களுக்குள் WSIB-க்கு நீங்கள் அறிவிக்க வேண்டும்.

உங்கள் வணிகத்தில் நீங்கள் பணியமர்த்தும் குடும்பத்தினர், பருவகால அல்லது தற்காலிக ஊழியர்கள், சில வீட்டுப் பணியாளர்கள், கட்டுமானப் பணிகளைச் செய்பவர்கள், மாணவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்சிப் பங்கேற்பாளர்கள் உட்பட எவருக்கும் காயம் அல்லது சுகவீனம் ஏற்பட்டால் அதை அறிவிப்பது உங்கள் பொறுப்பாகும்.

காயம் அல்லது சுகவீனம் வேலை சம்பந்தப்பட்டதா என உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், நீங்கள் அறிவிக்க வேண்டும். ஒரு காயம் அல்லது சுகவீனம் வேலை சம்பந்தப்பட்டதா அல்லது இல்லையா என்ற முடிவை நாம் எடுக்கிறோம்.

பணியிடக் காயம் அல்லது சுகவீனத்தை அறிவிப்பதைத் தடுப்பது சட்டத்திற்கு எதிரானதாகும்.

பணியிடக் காயம் அல்லது சுகவீனம் தொடர்பாக அறிவிப்பதற்கு QR குறியீட்டை ஸ்கான் செய்யவும் அல்லது **wsib.ca/reporting**க்குச் செல்லவும்.

WSIB Ontario

0087 WEB (01/2025) Tamil

# பணியில் ஒரு காயம் அல்லது சுகவீனம் ஏற்பட்டால் இந்தப் படிகளைப் பின்பற்றவும்:

| படி | நீங்கள் வேலையில் காயமடைந்தால் அல்லது சுகவீனமடைந்தால் | வணிகங்கள் |
| --- | --- | --- |
| **1** **மருத்துவ உதவியைப் பெறவும்** | உடனடியாக முதலுதவியைப் பெறவும். ஒரு சுகாதார நிபுணரைப் பார்க்கவும் அல்லது உங்களுக்கு மேலும் சிகிச்சை தேவைப்பட்டால் மருத்துவமனைக்குச் செல்லவும். காயம் ஏற்பட்ட நாளில் உங்கள் வேலைவழங்குநர் போக்குவரத்துச் செலவுகளைச் செலுத்துவார். | முதலுதவியை வழங்குவதுடன் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான சரியான பதிவுகளை வைத்திருக்கவும். உங்கள் ஊழியருக்குச் சுகாதாரப் பராமரிப்புச் சிகிச்சை தேவைப்பட்டால், நீங்கள் அவரைச் சுகாதார நிபுணரிடம் கொண்டு செல்ல வேண்டும் அல்லது காயம் ஏற்பட்ட நாளில் அவரது போக்குவரத்துச் செலவைச் செலுத்த வேண்டும். |
| **2** **ஆவணப்படுத்தவும்** | உங்களது காயம் அல்லது சுகவீனம் மற்றும் நீங்கள் பெற்ற மருத்துவச் சிகிச்சை தொடர்பாக இயலுமானளவு விரைவாக உங்களது வேலைவழங்குநரிடம் தெரிவிக்கவும். இயலுமானளவு போதிய விபரங்களை வழங்கவும். | ஒரு ஊழியர் பணி தொடர்பான காயம் அல்லது சுகவீனத்தைச் சந்திக்கும்போது, ஊழியர் அறிவித்த காயம் அல்லது சுகவீனம் மற்றும் அதன் காரணம் பற்றிய விவரங்களைப் பெறவும். உங்களது முதலுதவிப் பதிவுடன் சேர்த்து, இந்தத் தகவலை ஆவணப்படுத்தவும். |
| **3** **WSIBக்கு அறிவிக்கவும்** | பணியாளரின் காயம்/சுகவீனம் அறிக்கையைச் (படிவம் 6) சமர்ப்பிக்க, நீங்கள் QR குறியீட்டை ஸ்கான் செய்யலாம் அல்லது **wsib.ca/reporting** ஐப் பார்வையிடலாம்:<br>• ஒரு சுகாதார நிபுணரிடமிருந்து உங்களுக்குச் சிகிச்சை தேவைப்பட்டால், அல்லது<br>• உங்களால் வேலைக்குச் செல்ல முடியாவிட்டால், அல்லது<br>• உங்களுக்குக் குறைந்த சம்பளம் வழங்கப்பட்டால் அல்லது நீங்கள் குறைந்த வேலை மணித்தியாலங்களைப் பெற்றால், அல்லது<br>• ஏழு நாட்களுக்கு மேலாக வழமையான சம்பளத்தில் உங்களுக்கு மாற்றியமைக்கப்பட்ட வேலை தேவைப்பட்டால்<br><br>உங்களது காயம் அல்லது சுகவீனம் தொடர்பாக மூன்று வணிக நாட்களுக்குள் உங்களது வேலைவழங்குநர் அறிவிப்பதுடன், அவர்களது அறிக்கையின் பிரதியை உங்களுக்கு வழங்க வேண்டும். | வேலைவழங்குநரின் காயம்/சுகவீனம் அறிக்கையைச் (படிவம் 7) சமர்ப்பிக்க, நீங்கள் QR குறியீட்டை ஸ்கான் செய்யலாம் அல்லது **wsib.ca/reporting** ஐப் பார்வையிடலாம்: பணியிடத்தில் ஒரு காயம் அல்லது சுகவீனம் தொடர்பாக அறிந்து மூன்று வணிக நாட்களுக்குள் நீங்கள் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். உங்களது ஊழியர்:<br>• ஒரு சுகாதார நிபுணரிடம் சிகிச்சை தேவைப்பட்டால், அல்லது<br>• வேலைக்கு வராவிட்டால், அல்லது<br>• வழமையான சம்பளத்தை விடக் குறைவாகச் சம்பாதித்தால், அல்லது<br>• ஏழு நாட்களுக்கு மேலாக வழமையான சம்பளத்தில் மாற்றியமைக்கப்பட்ட வேலை தேவைப்பட்டால்<br><br>காயம் அல்லது சுகவீனம் தொடர்பான அறிக்கையின் பிரதியை நீங்கள் உங்களது ஊழியருக்கு வழங்க வேண்டும். சம்பவம் நடந்த நாளில் உங்கள் பணியாளருக்கு முழு நாள் ஊதியத்தை நீங்கள் வழங்க வேண்டும். |
| **4** **சேர்ந்து பணியாற்றவும்** | தொடர்பில் இருக்கவும். சரியான நேரத்தில், நீங்கள் குணமடைந்து பாதுகாப்பாக வேலைக்குத் திரும்ப உதவ, நாங்கள் உங்களுடனும் உங்கள் வேலைவழங்குநருடனும் இணைந்து பணியாற்றுவோம். | தொடர்பில் இருக்கவும். சரியான நேரத்தில், நீங்கள் மீட்சியடைந்து பாதுகாப்பாக வேலைக்குத் திரும்புவதற்கு உங்களுக்கு உதவுவதில் நாம் உங்களுடனும், உங்களது வேலைவழங்குநருடனும் பணியாற்றுவோம். |

முதலுதவிச் சிகிச்சை மாத்திரம் பெறப்பட்டால், WSIBக்கு நீங்கள் அறிவிக்கத் தேவையில்லை.

**உறுதியாகத் தெரியவில்லையா? எம்மைத் தொடர்புகொள்ளவும்.**

## எம்மைத் தொடர்புகொள்ளவும்

எந்த நேரத்திலும், எங்கேயும் எமக்கு ஒரு செய்தியை அனுப்புவதற்கு எமது இணையச் சேவைகளுக்குப் பதிவுசெய்யவும், அல்லது 1-800-387-0750இல் எம்மை அழைக்கவும் அல்லது இலவச தொலைபேசி இல (TTY): 1-800-387-0050. விபரங்களுக்கு **wsib.ca/onlineservices**க்குச் செல்லவும்.

**wsib.ca/reporting**

**தொலைபேசி:** 416-344-1000

**இலவசத் தொலைபேசி:** 1-800-387-0750

**TTY:** 1-800-387-0050

## அமைப்பின் மோசடி மற்றும் துஷ்பிரயோகம் குறித்து அறிவித்தல்

யாராவது ஒரு குற்றத்தைச் செய்ததாகவோ அல்லது WSIB கோரிக்கையை நிறுத்த முயற்சிப்பது உட்பட, பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுத் திட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகவோ, நீங்கள் சந்தேகித்தால், தயவுசெய்து **wsib.ca/reportfraud** என்ற முகவரியில் இரகசியமாக அறிவிக்கவும் அல்லது 1-888-745-3237 என்ற எண்ணில் எங்களை அழைக்கவும்.